18BTA64C – U4

பெயர்: முனைவர் க.சு.சிவகாமசுந்தரி

துறை: தமிழ்த்துறை

பாடம்: தமிழகவரலாறும் மக்களும்பண்பாடும்-II

ஆண்டு: இளங்கலை தமிழ் இலக்கியம் மூன்றாம் ஆண்டு

பாடக்குறியீடு: 18BTA64C

அலகு: 4

**தமிழகத்தில் 13 முதல் 18ஆம் நூற்றாண்டுவரை சமூகநிலை**

- தமிழகத்தில் 13 முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலான கால அளவில் மக்கள் சமூகத்தில் பலதுறைகளிலும் மாறுதல்கள் ஆனவை நாட்டின் வரலாறு மொழி வளர்ச்சி அயலவரின் தொடர்பும் அரசு ஆதிக்கமும் கிறித்தவர் இஸ்லாமியர் உடனான உறவுகள் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன மன்னர்களும் மக்களும் தொடர்ந்து கோயில்களுக்கும் மடங்களுக்கும் பிராமணருக்கும் தானங்கள் அளித்து வந்துள்ளனர்.
- வலங்கை இடங்கையினரின் பூசல்கள் ஓய்ந்தபாடில்லை. அரசர்கள் அடிக்கடி அவற்றின் தலையிட்டு தீர்த்து வைக்க வேண்டிய நெருக்கடியும் ஏற்பட்டுள்ளன.
- பிராமணர்கள்
  பிராமணர்கள் மன்னர்களிடமும் குறுநில மன்னர்களிடமும் சிறந்த தொண்டர்கள் ஆகவும் வரும்பொருள் உயர்ந்தவர்களாகவும் திருவருள் பெற்றவர்களாகவும் நடந்து கொண்டனர்
  சோழப் பேரரசு போலவே விஜயநகரப் பேரரசரும் நாயக்கர்களும் பிராமணருக்கு பேராதரவு தந்தனர் விஜயரஙீக சொக்கநாத நாயக்கன் திருவானைக்கா சங்கர மடத்துக்கு நிவந்தங்கள் அளித்துள்ளான்
- விஜயநகரப் பேரரசரும் நாயக்கரும் போசளரும் தமிழகத்துடன் அரசியல் தொடர்பு கொண்ட பிறகு தெலுங்கரும் கன்னடியரும் ஆயிரக்கணக்கில் தமிழகத்தில் குடியேறினார்கள்.
- பிராமணர்கள் பெற்ற தனிச்சிறப்பு களையும் செல்வாக்கையும் கண்டும் மன புகைச்சல் இன்றியே ஏனைய குடிமக்கள் அவர்களுடன் ஒத்து வாழ்ந்தார்கள் என்று சில வரலாற்று ஆசிரியர் கருதுவர்.
  **முஸ்லிம்கள்**
- தமிழகத்தில் முஸ்லிம்களின் குடியேற்றம் 13ஆம் நூற்றாண்டிலேயே ஏற்பட்டுவிட்டது என தெரிகின்றது மாலிக்காபூர் படையெடுப்பு வருவதற்கு முன்னரே முஸ்லிம்கள் ஆயிரக்கணக்கில் தமிழகத்தில் நுழைந்து பாண்டிய மன்னர்களின் படை தொழிலிலும்

ஈடுபடலானார்கள். முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் (1216-38) ஒரு கழனிக்கு துலுக்க ராயன் குளி என்று பெயர் வழங்கி வந்துள்ளது.

**பிறர்**

- அராபியர்கள் யூதர்கள் பார்சியர்கள் சீனர்கள் மலேயர்கள் போர்ச்சுகீசியர்கள் வேறு பல ஐரோப்பிய நாட்டினர் தமிழகத்திற்கு வந்து பல தொழில்களில் ஈடுபடலாயினர்.
- பொருளாதாரத்தின் அடிப்படையில் குலங்கள் நூற்றுக்கணக்கில் பெருகி வந்தன. சில குளங்கள் சிறுசிறு வகுப்புகள் ஆகவும் பிரிந்து போனதுண்டு. கம்மாளர்கள் பொற்கொல்லர்களாகவும் தச்சர்களாகவும் கருமார்களாகவும், கன்னார்களாகவும், சிற்பிகளாகவும் பிரிந்தார்கள். இவ் வகுப்புகளுக்கு இடையே விருதுகள் நடைமுறை உரிமைகள் ஆகியவற்றின் காரணமாக அடிக்கடி சச்சரவுகள் நேர்ந்தது உண்டு. ஒரு முறை மதுரை வீரப்ப நாயக்கன் தலையிட்டு சச்சரவு ஒன்றைத் தீர்த்து உடன்படிக்கை ஒன்றையும் ஏற்படுத்தினான். கருமார்களுக்கும் தச்சர் களுக்கும் தட்டார்களுக்கும் நிலங்கள் தானமாக அளிக்கப்பட்டன.
- தமிழரின் சமூகத்தில் கைக்கோளர்கள் கம்மாளர்களைப் போலவே மிகவும் சிறப்பான இடம் பெற்றிருந்தனர். கைக்கோளர் படை என தனிப்படைகள் வகுக்கப்பட்டிருந்தன.நாளடைவில் அவர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு குடிமக்களுக்கு பலவகையான துணிகளை நெய்து கொடுத்தார்கள். ஊர்தோறும் இவர்களுக்கெனத் தனித்தெருக்களே அமைந்திருந்தன.கைக்கோளர் நெய்து வந்த தறிகளுக்கு வரிகள் போடும் வழக்கம் தொடர்ந்து காணப்படுகிறது. பட்டடை முலாயம் என்பது விஜயநகர மன்னர்கள் தறிகளின் மேல் விதித்த வரியாகும்.
- இதேபோல் குதிரைச் செட்டிகள், பூமி தேவபுத்திரர், கம்பளத்தார், கார்காத்த வேளாளர், ரெட்டிகள், கரைக்காட்டார், கடிகாரத்தை முதலியார் ஆகிய குலத்தாரும் சிறப்புடன் வாழ்ந்தனர்
- வடஆர்க்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் அரசாட்சி புரிந்து வந்த குறுநில மன்னர்களான சம்புவராயர்கள் வன்னிய குலத்தைச் சார்ந்தவர்கள் ஆவர்.

வலங்கை இடங்கைப் பூசல்கள்

- இவர்களைப் பற்றிய விரிவான செய்திகள் இந்நூற்றாண்டுகளில் அதிகம். இடங்கை வரி வலங்கைவரி வசூலிக்கப்பட்டன.இவ்விரு வகுப்புகளில் சேர்க்கப்பட்டிருந்த தனித்தனி 98 குலத்தினரைப் பற்றிய விளக்கம் ஒன்று அச்சுத தேவராயரின் கல்வெட்டில் காணப்படுகிறது.இவ்விரு வகுப்பினரிடையே அடிக்கடி சச்சரவுகள் நேரிட்டன. இத்தகைய கலகம் ஒன்று முதலாம் வீர விருபாட்சன் காலத்தில் மலையம்பட்டில் விளைந்தது.பிறகு அவர்களுக்குள் உடன்படிக்கையும் ஏற்பட்டது. வலங்கை வகுப்பினரின் தலைவன்

ஒருக்காப்புலியுடையான் என்பவனை, வருதன்பட்டி இடங்கை வகுப்பைச் சார்ந்த தனிப்புலித்தேவன் என்பவன் கொன்றுவிட்டான். அதனால் இடங்கை வகுப்பினருக்கு ஒருக்காப்புலியன் கொடுத்துவந்த தொல்லைகள் நீங்கின. வீரப்ப நாயக்கரும் கண்மால குலத்தைச்சார்ந்த ஐந்து பிரிவினரும் அவனைக் கொன்ற இடங்கை வீரனுக்கு சில சிறப்புரிமைகள் வணங்கி மானிய பட்டத்தையும் எழுதிக் கொடுத்தனர்

- இவ்விரு குலத்தாரும் சில சமயங்களில் ஒற்றுமையாக நின்று தமிழ் இடையூறு செய்தவர்களை அடக்கியுள்ளனர்
  சில பழக்கவழக்கங்கள்
- கிராம தேவதைகளின் கோயில்களில் உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கம் ஆனது பதினைந்தாம் நூற்றாண்டிலேயே இருந்து வந்துள்ளது.
- குற்ற விசாரணையின் போது பழுக்க காய்ச்சிய குழு ஒன்றை உருவச் செய்து குற்றம் கண்டுபிடிக்கும் முறையை மக்கள் கையாண்டு வந்தனர்.
- மத்திய அரசாங்கம் வலுவானதாக இல்லாததால் அந்நாள்களில் தடி எடுத்தவன் தண்டல்காரன் என்பதற்கேற்ப பாளையக்காரர்களும் நிலக்கிழார்கள் அரசு செலுத்தி வந்தார்கள்.

இலக்கியம்

- உரையாசிரியர்கள் பலர் தோன்றிய கால கட்டம் 14ஆம் நூற்றாண்டு.
- தமிழிலும் வடமொழியிலும் பல சாத்திர தோத்திர புராணங்கள் இயற்றப்பட்டன.
- வடமொழிச் சொற்கள் விரவிய தமிழ் உரைநடையொன்று மணிப்பிரவாளம் எனப்பட்டது.
- வில்லிபுத்தூர் ஆழ்வார் இரட்டைப் புலவர்கள் காளமேகப் புலவர் அருணகிரிநாதர் கச்சியப்ப சிவாச்சாரியார் முதலியோர் இக்காலகட்டத்தில் தோன்றியவர்கள்.
- பவணந்தி முனிவரின் நன்னூலுக்குச் சிறந்த உரை எழுதிய மயிலைநாதரும், உரையாசிரியர்களின் தலை சிறந்தவர் என கருதப்படும் நச்சினார்க்கினியரும் திருக்குறள் உரையாசிரியர்களுள்
- மிகச் சிறந்தவர் எனப் பாராட்டப்படும் பரிமேலழகரும் 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். தமிழகத்தில் அவ்வையார் என்னும் பெயரில் சிறப்புற்ற பெண்பாற் புலவர்கள் ஒருவருக்கு மேற்பட்டவர்கள் வந்திருந்தனர். அவர்களுள் பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் ஒருவர் அவ்வை குரல் விநாயகர் அகவல் என்னும் யோக நெறி நூல்களை இயற்றி சிறப்பித்துள்ளார்.
- காளமேகப் புலவர், இரட்டைப்புலவர், சவ்வாதுப் புலவர் சர்க்கரைப் அருணகிரிநாதர் கயாதர ர், கடவுள் மாமுனிவர் சிதம்பர சுவாமிகள்

சிவஞான வள்ளல் தத்துவராய சுவாமிகள் மணவாள மாமுனிகள் ஆகியோர் சிறந்த படைப்புகளைத் தந்த காலம்.

- சோதிடம் மருத்துவம் ஆகிய துறைகளிலும் பல நூல்கள் இயற்றப்பட்டன. தேரையர் என்பவர் மருத்துவ நூல்கள் எழுதியுள்ளார் அறுவை மருத்துவத்திலும் நோய் தடை முறைகளிலும் நோய் நாடும் முறைகளிலும் மிகவும் ஆற்றல் படைத்தவர்.

சித்தர் சித்தர்கள்

- சித்தர்கள் சித்தி பெற்றவர்கள். தமிழகத்தில் சித்தர் பலர் அவ்வப்போது ஆங்காங்கு வாழ்ந்து வந்துள்ளனர். திருமூலரின் ஞான பரம்பரையில் வந்தவர்களாகக் கருதப்படுபவர். சித்தர் பாடல்களுக்கு எளிதில் பொருள் காண இயலாது. சொற்களைக் கொண்டு மறைபொருளை விளக்குவதாக இலக்கிய மரபை கையாண்டுள்ளனர் சித்தர் வரிசையில் அகத்தியருக்கு முதல் இடம் அளிக்கப்பட்டது இடைக்காடர், ரோமர், கொங்கனர், கருவூரார், சட்டை முனி நாதர், பிண்ணாக்கீசர், போகர், ராமநாத தேவர் என்ற யாகோபு ஆகியவர்களின் பெயர்களும் இவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளன.
- குமரகுருபர சுவாமிகள் மதுரை திருமலை நாயக்கர் உடன் காலத்தவர் சிறந்த தமிழ்ப் புலமை வாய்ந்தவர். சகலகலாவல்லி மாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், நீதிநெறி விளக்கம் படைத்தவர்.

வாணிகம்

- நாயக்கர் காலத்தில் தமிழ்நாட்டில் வாணிகம் வளர்ச்சியுறவில்லை, கடற்படையும் கப்பல்களும் அவர்களிடம் இல்லாமையே இதற்கு காரணமாகும் அயல்நாட்டு வாணிகம் தடைபட்டு கிடந்தது போர்ச்சுகீசியர்கள் டச்சுக்காரர்கள் மதுரை துணி வகைகளை கொள்முதல் செய்து அவற்றுக்கு ஜப்பானிலிருந்து தோலையும்,மொழுக காஸிலிருந்து சம்பார சரக்குகளையும் பண்டமாற்று செய்து கொண்டனர் போர்ச்சுகீசியர் தூத்துக்குடியில் யானைகளை வைத்து வெடி உப்பை வாங்கினர். மதுரையில் துணி வாணிகம் செழிப்பாக நடைபெற்று வந்தது.

சமயம்

- நாயக்கர் காலத்தில் சைவ-வைணவ பூசல்கள் காணப்படவில்லை ஒருமைப்பாடு நிலவி வந்தது நாயக்க மன்னர்கள் கிருத்துவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பல நிவந்தங்களை வணங்கினர் திருமலை நாயக்கன் பல கோயில் திருப்பணிகளில் கொண்டான் பேரூர் கோயில் கல்யாண மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள அழகிய சிற்பங்கள் திருமலை நாயக்கன் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. சிவன் வழிபாடும் திருமால் வழிபாடும் மிக உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டன. சிறுதெய்வ வழிபாடும் நாடெங்கும் காணப்பட்டது. பிராமணர்களுக்கு

தொடர்ந்து தானங்கள் வழங்கப்பட்டன. திருவிளையாடற் புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவரும் திருமலை நாயக்கன் காலத்தவர்.

- துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், சைவ எல்லப்ப நாவலர், பிள்ளை பெருமாள் ஐயங்கார், படிக்காசுப் புலவர் தாயுமானவ சுவாமிகள் இஸ்லாம் மதத்தினர் ஆனா புலவர்கள் பலர் சர்க்கரைப் புலவர், சவ்வாதுப் புலவர், வண்ணக்களஞ்சியப் புலவர் நைனா முகம்மது புலவர், உமறுப் புலவர், குணங்குடி மஸ்தான் சாயபு படைப்புகள் பல செய்தனர்.
- பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழிலக்கிய வளர்ச்சியானது. குறவஞ்சி பள்ளு போன்றவை சான்று.
- பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழ் வளர்ச்சியில் கிறித்தவப் பாதிரியார்களும் ஈடுபடலாயினர். இத்தாலியில் பிறந்த வீரமாமுனிவர் கிறித்தவ சமயப் பணிக்காக தமிழகத்தை அடைந்தார். புதிய முறையில் இலக்கியங்கள் படைத்தார். தேம்பாவணி, பரமார்த்த குரு கதை, சதுரகராதி குறிப்பிடத்தக்கன.

இவ்வகையில் 13-18ஆம் நூற்றாண்டு தமிழ்ச் சமூகத்தில் மாற்றங்கள் பல ஏற்படுத்திய நூற்றாண்டுகளாகும்.

ஐரோப்பியரின் வரவு

- இந்தியாவில் போர்ச்சுகீசிய இருக்கு ஏற்பட்டிருந்த அரசியல் ஏற்றம் மாநில செல்வாக்கு கண்டு ஆங்கிலேயர் மனம் கலங்கினர் இங்கிலாந்து அரசி எலிசபெத் வழங்கிய பட்டயம் ஒன்றின்படி கிழக்கிந்திய கம்பெனி என்னும் பெயரில் வாணிக நிறுவனம் 1600 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி தொடங்கப்பட்டது தொடக்கத்தில் சில ஆண்டுகள் அதற்கு பல இன்னல்கள் தோன்றின ஆனால் கம்பெனியின் முதல் தொழிற்சாலை ஆனது சூரத் என்னும் ஊரில் கட்டப்பட்டது சர் தாமஸ் ரோ என்னும் ஆங்கிலேயர் 1616-18 ஆண்டுகளில் டில்லி முகலாயர் அரசவையில் அமர்ந்திருந்து தம் நாட்டு வாணிக முன்னேற்றத்திற்கு பல உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றார் ஆங்கிலேயர் வாணிகத்தின் வளர்ச்சியிலே கண்ணும் கருத்துமாக இருந்து வர வேண்டுமென்றும் நாடு பிடிக்கும் எண்ணத்துடன் இந்திய மண்ணின் மேல் போர் முயற்சிகளில் இறங்க கூடாது என்றும் சர் தாமஸ் ரோ என்னும் ஆங்கிலேயர் வலியுறுத்தினார் ஆனால் அவருடைய கருத்து அரசியலாளர்கள் இடையே எடுபடவில்லை ஆங்கிலேயர்கள் புலி காட்டில் தொழிற்சாலை ஒன்றை நிறுவ முயன்று தோற்றுப் போயினர் பின்னர் மசூலிப்பட்டினம் 1611 தொழிற்சாலை தொடங்கினார். கிழக்கிந்திய க் கம்பெனியைச் சார்ந்த பிரான்ஸிஸ் டே என்ற ஆங்கிலேயன் சென்னையில் சாந்தோமுக்கு அண்மையிலேயே செயின்ட் ஜார்ஜ் கோட்டை இப்போது அமைந்துள்ள அடி நிலத்தை1639ல்

கம்பெனிக்குச்சொந்தமாக்கிக் கொண்டான்.சென்னையைச்சுற்றியுள்ள இடத்தை க் கோல்கொண்டா வின் முதலமைச்சன் மீர்ஜும்லா என்பவன் வென்று தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டான்.அப்போது ஆங்கிலேயர் சென்னையில் பெற்ற உரிமைகள் அனைத்தையும் உறுதி செய்து கொடுத்தான்.ஐந்தாண்டுகள் கழித்து கம்பெனியின் கிழக்கிந்திய நாடுகளுக்கு செயிண்ட் ஜார்ஜ் கோட்டையே தலைமை ஆட்சி இடமாகவும் அமைந்தது.

- சென்னையில் மக்கள் தொகை பெருகியது . 1670ல் 40 ஆயிரத்தை எட்டி நின்றது. அடுத்த கவர்னராக வில்லியம் லேங்கார்ன் நியமனம் ஆனார். சென்னைப் பகுதியில் சிவாஜி படையெடுத்து வந்தபோது அவருடன் கவர்னர் நட்புறவு தொடர்புகளை மேற்கொண்டார் நீதி நிர்வாகம் சீரமைக்கப்பட்டது. 1690ல் கூடலூருக்குத் தெற்கே செயின்ட் டேவிட் கோட்டை எழுப்பப்பட்டது.
- தமிழகத்தில் பாண்டிய மன்னர்கள் பேரரசர்களாக வாழ்ந்திருந்து குறுநில மன்னர்களாக மாறி இறுதியில் மதுரை நாயக்கரின் கீழும் விஜயநகர வேந்தரின் கீழும் வெற்று ஜமீன்தார்களாக இழிவுற்று பண்டைய பெருமையை இழந்து மறைந்து போயினர்.

போர்ச்சுக்கீசியர்

- இந்தியாவிற்குள் முதன் முதல் அடி எடுத்து வைத்த ஐரோப்பியர் போர்ச்சுகீசியராவர். வணிகத்தால் பொருளீட்டும் நோக்கத்துடனே நாட்டுக்குள் நுழைந்தனர். அவர்கள் பெரிதும் விரும்பி இந்நாட்டில் கொள்முதல் செய்த சரக்கு மிளகும் ஏனைய சம்பாரம் பொருட்களும் ஐரோப்பியரின் உணவுக்கு சுவையூட்டவும் அதை பாத்திரங்களில் நிரப்பி 18 வைக்கவும் மிளகு லவங்கம் ஏலக்காய் முதலிய நறுமணப் பண்டங்களும் ஐரோப்பியருக்கு பெரிதும் தேவைப்பட்டன.
- போர்ச்சுகீசிய மாலுமி வாஸ்கோடகாமா என்பவர் முதன்முதல் கிபி 1498ல் கள்ளிக்கோட்டை வந்தார். அவர் வகுத்த கடல்வழியே ஏனைய ஐரோப்பியரும் வந்து இந்தியாவுடன் கடல் வாணிகம் மேற்கொண்டனர். வாணிகக் கப்பல்கள் தொடர்ந்து போர்க் கப்பல்கள் வந்தன நாட்டம் பின்னர் நாடு பிடிக்கும் முனைப்பாக மாறியது.

டச்சுக்காரர்கள்

- போர்ச்சுக்கீசியருக்கும் டச்சுக்காரருக்கும் இடையே நேரிட்டு வந்த பூசல்களில் போர்ச்சுக்கீசியரின் கை ஒடுங்கியது. அவர்கள் இலங்கையை டச்சுக்காரர் இடம் இழந்தனர் பின்னர் டச்சுக்காரர்கள் தூத்துக்குடியையும் நாகப்பட்டினம் தன் வசம் ஆக்கினார்.
- தரங்கம்பாடியில் டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனி வணிகர்கள் கோட்டை ஒன்றை கட்டி தம் வாதத்தை தொடங்கினார்.நாட்டின் அவல நிலையை

அறிந்து ஐரோப்பியருடன் பிரெஞ்சுக்காரரும் அரசியல் வட்டாரத்தில் இறங்கினர்.

-

கிழக்கிந்தியக் கம்பெனி

- இங்கிலாந்தின் குடிமக்கள் அனைவருமே வாணிகம் செய்யும் உரிமை உடையவர்கள் ஆவர்.
- முதல் கர்நாடகப் போர் இரண்டாம் கர்நாடகப் போர் மைசூர் போர்களைத் தொடர்ந்து ஆங்கிலேயர் ஸ்ரீரங்கப் பட்டினத்தை சூறையாடினர்.

பாளையக்காரரின் கிளர்ச்சிகள்

- வீரபாண்டிய கட்டபொம்மன்

மதுரை நாயக்கர் பரம்பரை மறைந்த பிறகு அவர்களுக்கு வரி தண்டி கொடுத்தும் படை வீரர்களைத் திரட்டிக் கொடுக்கும் உதவி வந்பாளையக்காரர்கள் தனிக்காட்டு மன்னராக மாறிவிட்டனர். பாஞ்சாலங்குறிச்சியை க் கட்டபொம்மன் ஆண்டுவந்தான். வரி தண்டுவடத்தில் கட்டபொம்மனுக்கும் கம்பெனிக்கும் கருத்து வேறுபாடுகள் நேர்ந்தன 1797ஆம் ஆண்டு செலுத்தவேண்டிய வரிப்பணத்தை கொடுக்க மறுத்தான். கம்பெனியின் பெயரால் அவன் தன் குடிமக்களிடமே அதிக வரிகளை வற்புறுத்திப் பெற்றான்.கட்டபொம்மனின் கொடுங்கோன்மை கம்பெனியின் செவிகளுக்கு ராமநாதபுரத்தில் கலெக்டர் ஜாக்சன் கட்டபொம்மனை அலைக்கழித்தார்.

- கட்டபொம்மனும் அவன் தம்பி ஊமைத்துரையும் கம்பெனியின் பிடியில் என்றும் தப்பியோடி பல கிராமங்களை தீயிட்டுக் கொளுத்தினர். இறுதியில் கட்டபொம்மன் ஆங்கிலேயரை எதிர்த்து சுதந்திரப் புரட்சியை தோற்றுவித்தான் அதனால் கயத்தாறு என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டான்.

மருது பாண்டியர்

- பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில்சிவகங்கைச் சீமையானது பெரிய மருது பாண்டியர் என்பவரின் ஆட்சி உடைமை ஆயிற்று. அவருடைய தம்பி சின்னமருது அவருக்குப் பெருந்துணைபுரிந்தார். ஆங்கிலேயரை எதிர்த்த அவர்களும் தூக்கிலிடப்பட்டனர்.

தீர்த்தகிரி

தீர்த்தகிரி என்ற கொங்கு நாட்டு வீரன் ஆங்கிலேயரை எதிர்த்து போர்க்கொடி தூக்கினார்.1799முதல்1805வரை ஆங்கிலேயரை தீவிரமாக எதிர்த்து நின்றார். ஓடாநிலை என்னும் ஊரில் கோட்டை கட்டி படை திரட்டி வந்த இவரையும் ஆங்கிலேயர் 1805 அடக்கினர் தமிழகத்தில் கடைசியாக ஆங்கிலேயரை எதிர்த்து நின்றவர் தீர்த்தகிரி இவர் தீரன் சின்னமலை என்னும் பெயரால் தமிழக வரலாற்றில் புகழ் பெற்றவர்.